பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 மார்கழி 14 முஹறம் 17 இதழ் 319
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 29-12-77

லாலா
நீலசோப்பின் மேலுறைகள்
25 சேர்த்துக் கொடுத்தால்
ஒரு அப்பியாசக் கொப்பி இனாம்!
லாலாசோப் தொழிற்சாலை
அச்சுவேலி

# சட்டசபையிலிருந்து தி. மு. க. வெளிநடப்புச் செய்தது!

சென்னை- டிச. 28

தமிழ்நாடு சட்டசபையில் இன்று எதிர்க்கட்சித்தலைவர் திரு. மு. கருணாநிதியும் தி.மு. க உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

தமிழ்நாடு சட்டசபைக்கூட்டத்தொடர் இன்று சபாநாயகர் திரு.முனு ஆதி தலைமையில் ஆரம்பமானது கூட்டத் தொடக்கத்தில், அண்மையில் தமிழ் நாட்டிலும் ஆந்திரப்பிரதேசத்திலும் நகழ்ந்த இயற்கை அழிவினால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும்வகையல் இரண்டுநிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அனுதாபத்தீர்மானம் ஒன்றும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**கலைஞர் கண்டனம்**

சபைக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மு.கருணாநிதி பேசுகையில்; 'சென்னையில் இன்று நடைபெற்ற விவசாயப் பேரணிக்கு அரசு அனுமதி வழங்கிவிட்டு, இப்பேரணியில் கலந்துகொள்ள வெளியூர்களிலிருந்துவந்தவர்களைத் தடை செய்திருக்கிறது. இது என்ன நியாயம்?' என்று கண்டனம் எழுப்பினார்.

"வெளியூர்களிலிருந்து பஸ்களில் வந்தவர்கள் பல இடங்களிலும் தடைசெய்யப்பட்டுள்ளனர். பல நூற்றுக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பஸ்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன, இந்த உத்தரவுகள் எல்லாம் இங்கிருந்துதான் சென்றிருக்கின்றன" என்று கூறிய கலைஞர்,

"இந்த நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்" என்று அறிவித்து சபையை விட்டு வெளி நடப்பு

[6ம் பக்கம் பார்க்க]

## அரசியலமைப்பு திருத்த விவாதத்தில்

# தமிழர்விடுதலைக்கூட்டணி கலந்து கொள்ளுமா?

## 'அமிர்' தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

**அரசியலமைப்பு திருத்த நகல் மசோதா விவாதத்தில், தமிழர் விடுதலைக்கூட்டணி கலந்துகொள்ளுமா?**

**தேசிய அரசுப் பேரவையில் நடைபெறும் இந்த (நகல் மசோதாமீதான) விவாதத்தில், கலந்துகொள்வதா இல்லையா என்பதை, குறிப்பிட்ட இம்மசோதா வந்தபின்னர்தான் கூட்டணிதீர்மானிக்கும்".**

"இந்தத்தீர்மானமும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் நடவடிக்கைக்குழுகூடித் தீர்மானித்த பின்னர்தான் முடிவுசெய்யப்படும்' என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபரும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் 'ஈழநாடு'க்குத் தெரிவித்துள்ளார்,

அரசியல் திருத்தம் சம்பந்தமான் தெரிவுக்குழு, ஜனவரி மாதம் 7ம் திகதி கூடுகிறது.

(இக்குழுவில், தமிழர் விடுதலைக்கூட்டணி அங்கம் வகிக்காது என்பது தெரிந்ததே)

தெரிவுக்குழுகூடி, ஆராய்ந்து தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டபின்னர், நகல் மசோதா தயாரிக்கப்பட்டு, முதலில் அமைச்சரவையின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கப்படும். இதன் பின்னர், இந்தநகல்மசோதா அரசியல் திருத்தநகல்மசோதா தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படும். விவாதம் பத்து தினங்கள் வரை நடைபெறும்.

அரசியல் திருத்த நகல் மசோதா மீதான விவாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அவசியம் கலந்துகொண்டு, கருத்துக்களை வெளியிடவேண்டுமென்ற குரல் கூட்டணி வட்டாரங்களில் இப்போது கடுமையாக எதிரொலித்துக் கொண்டிருந்தபோதிலும், இது பற்றிய முடிவு, நகல் மசோதா முழுவடிவம் பெற்ற பின்னர், கூட்டணிக்குழு கூடித்தீர்மானித்த பின்னர்தான் மேற்கொள்ளப்படுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றிரவு 'ஈழநாட்டு'க்குத்தெரிவித்தார்

## இன்று பொன்கலன் வழக்கு

(யாழ்ப்பாணம்)

ஸீ.ஐ.டி. இஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளைக்கு எதிராக பீற்றர் பொன்கலனால் தொடுக்கப்பட்ட வழக்கு இன்று 29ம் திகதி கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. (கா-அ)

# தி.மு.க நடத்திய விவசாயப்பேரணி!

## பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்

சென்னை, டிச. 28

இன்றுகாலை இங்கு நடைபெற்ற தி. மு. கழகத்தினரின் விவசாயப் பேரணியில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்!

தேனாம்பேட்டை திராவிட முன்னேற்றக்கழக அலுவலகத்திலிருந்து, திரு. அன்பில் தர்மலிங்கம் தலைமையில் ஆரம்பமான இப்பிரமாண்டமான விவசாயிகள் ஊர்வலத்தில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த விவசாயிகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

விவசாயிகள், தங்களின் குறைகளைத் தெரிவிக்கும் கோரிக்கைகளை, சுலோகங்களில் சித்தரித்திருந்தனர். எந்த விதமான அசம்பாவித சம்பவங்களும் இடம்பெறவில்லை.

முன்னேற்பாடு நடவடிக்கையாக நேற்றிரவு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 150 பேர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர் என்றும். இன்று நடைபெற்ற விவசாயிகள் பேரணி மிகவும் அமைதியாக இருந்ததென்றும் போலிஸார் தெரிவித்தனர்.

விவசாயிகளின் பேரணி, அமைதியாக நகர்ந்துசென்று கொண்டிருந்ததை கலைஞர் கருணாநிதி, மவுண்ட் ரோட்டிலுள்ள அண்ணா சிலையருகே நின்று அவதானித்துக்கொண்டிருந்தார்.

ஊர்வலமாகச் சென்ற விவசாயிகள், தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்து மகஜரொன்றைக் கையளித்தனர்.

இதுபற்றி இன்று பிற்பகல் தமிழ்நாடு முதலமைச்சர் நிருபர்களிடம் பேசுகையில் "விவசாயிகள் தங்களின் குறைகளைப் பற்றித் தம்மிடம் விரிவாக எடுத்துரைத்தனரென்றும், தாமும் அவர்களின் பிரச்னைகள் குறித்து மனம்விட்டுப் பேசியதாகவும், பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுச் சுமுகமான முடிவுகள் காணப்படுமென்றும் தெரிவித்தார்.

## இந்த விவசாயிகளும் கடன் பெறலாம்

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள அரசாங்ககாணிகளில் அத்து மீறிக்குடியேறி இரண்டு வருடங்களுக்குமேல் அக்காணிகளில் பயிர் செய்த விவசாயிகளுக்கும் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சித் தொகுதி எம். பி திரு. வீ. ஆனந்தசங்கரியின் முயற்சியால் இக்கடன் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கச்சேரியில் நடைபெற்ற இணைப்புக்குழுக்கூட்டத்தில் கிளிநொச்சிப் பகுதியில் அரசாங்க காணியில் அத்துமீறிக் குடியேறி அதில் விவசாயம் செய்து வருபவர்களுக்கும் கடன் வசதி அளிக்கவேண்டுமென்று வற்புறுத்தியதை யடுத்து இவர்களுக்கும் கடன் வசதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக மக்கள் வங்கி இலங்கைவங்கி ஆகிய வற்றில் இவ்விவசாயிகள் கடனைப் பெறலாம். (கா-அ)

கார் உடன் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள போட் கொன்சல் கார் (E L பீத்திய நம்பர்) ஒன்று உடன் விற்பனைக்குண்டு. இம்மாதம் 28க்கும் 31க்கும் இடையில் கீழ்க்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம்.

வ. ஜீவரத்தினம்,
இருபாலை ரோட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
8029

## 'ஈழநாடு' பஞ்சாங்கம்

'ஈழநாடு' புதுவருட பஞ்சாங்கம் இம்மாதம் 31-ம் திகதி 'ஈழநாடு' பிரதியுடன் இணைந்திருக்கும். வாசகர்கள் தமது தேவைகளுக்கு முன்கூட்டியே எமது ஏஜண்டுகளிடம் பதிவுசெய்து கொள்ளவும். ஏஜண்டுகள் 'ஈழநாடு' விநியோகப் பகுதியுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர்.

## கூட்டணியின் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாராந்தக் கருத்தரங்கு 31ந் திகதி காலை தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது இக்கருத்தரங்கில் 'இன்றைய

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

மரக்கடைச்சல் இயந்திரத்தில் வேலை செய்வதற்கு வேலை பழகுபவர்களும், பழகியவர்களும் தேவை. சித்திரம் வரைவதில் திறமையுள்ளவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும். ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 5-1-1978 செல்வா புறடக்ஸ் ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு சந்தி, நல்லூர். 8037

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ளவர்களும் வேலை பழகுபவர்களும் (Trainees) உடனடியாகத் தேவை. வேலை பழகுபவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து நாளொன்றிற்கு ரூபா 6/- வரையில் சம்பளமாகக் கொடுக்கப்படும். நீர்வேலிக்கு கிட்டடியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 7790

### தவறிவிட்டது

யாழ் பஸ்நிலையத்தில் எனது சாதகம் கடிதம் முதலியன அடங்கிய ஒரு என்வலப் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். ஆ. சுப்பிரமணியம். வேதரி அடைப்பு காரைநகர். சன்மானம் கொடுபடும். 8027

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் ரெயர்ரு கார் ரயர் கப் காப் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். J. G. அரசரத்தினம், 76/A, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 8035

### விற்பனைக்கு

CN 5176 இலக்க A 40 ஒஸ்ரின் கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: K. கதிர்காமத்தம்பி. 321, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 8038

யாழ்ப்பாண மாநகரசபை

1978

## வழங்குனர்களைப் பதிவு செய்தல் மராமத்துப் பகுதி

1978-ம் ஆண்டுக்கு யாழ் மாநகரசபை எல்லைக்குள் குறிப்பிடப்படும் இடங்களில் மணல், உடைகல், கிளறுகல், கண்டகல் சகல அளவிலும் கிறசர் சல்லி, கிறீற். தேங்காய் மட்டை, சுண்ணாம்பு, கிடுகுவகை முதலியவற்றை வழங்கக்கூடியவர்களாக இம்மன்றத்தோடு பதிவு செய்து கொள்வதற்கு பிரசித்த வழங்குனர்களிடம் ஒப்பந்தகாரர்களிடம், கிறசர் உடைமையாளர்கள் ஆகியோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை உள்ளடக்கும் காகித இடது பக்க மூலையில் "வழங்குனர்களைப் பதிவு செய்தல்-1978" (மராமத்துப் பகுதி) எனக் குறிப்பிடப்பட்டு 10-01-1978 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இதன் கீழ்க் கையொப்பமிடுபவருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தேவைகளுக்கேற்ப பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து வழக்கமாக கூறு விலைகள் கோரப்படும் ஆயினும் அவசியமெனக் கருதும் பட்சத்தில் இந்நடைமுறையில் இருந்து நீங்கும் உரிமையைச்சபை தனக்கேஒதுக்கியுள்ளது. வேண்டப்படும் போது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்க அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விபரக்கூற்றுக்களுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாக இருக்கின்ற வழங்குனர்களின் பதிவுகள் அறிவித்தலில்லாது பதிவேட்டிலிருந்து நீக்கஞ்செய்யப்படும்.

க. சிவஞானம்,
விசேட ஆணையாளரும்
மாநகர ஆணையாளரும்,
யாழ்ப்பாணம்.

மராமத்துப்பகுதி,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
27-12-1977 8032

### வியாபாரம் பெருக விளம்பரஞ் செய்க


# தமிழ்நாட்டில் தமிழுக்கு ஏற்பட்ட தடைகள்

## உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க விழாவில் கலைஞர் விளக்கம்

[உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க விழாவில் கலைஞர் நிகழ்த்திய உரையின் 1-ம் பகுதி 27-12-77 'ஈழநாடு' இதழில் வெளிவந்தது. அவரது உரையின் 2-ம் பகுதி இங்கே பிரசுரிக்கப்படுகிறது.

பல நாடுகளிலிருந்து வந்திருக்கின்ற தமிழர்களாகிய நீங்கள் கடந்த சில நாட்களாக தமிழகத்தின் பலபகுதிகளைப் பார்த்திருப்பீர்கள். கழக அரசு இருந்த காலத்தில் தமிழகத்தை வளர்க்க தமிழ் செழிக்க, தமிழ் வரலாறு மங்காமல் மறையாமல் பாதுகாக்கப்பட எத்தகைய அருஞ்செயலில் ஈடுபட்டதுஎன்பதை நேரில் கண்டிருப்பீர்கள்.

### வள்ளுவரும் பூம்புகாரும்

வள்ளுவர் கோட்டத்தைக் கண்டிருப்பீர்கள் வாழ்த்தியும் இருப்பீர்கள். அங்கே வசைபாடிக் கொண்டிருப்பவர்கள் சிலரையும் சந்தித்திருப்பீர்கள்.

பூம்புகாரைப் பார்த்திருப்பீர்கள் பூரித்தும் போய் இருப்பீர்கள் அங்கே வீண் புகார் கூறுபவர்களையும் கண்டிருப்பீர்கள்.

### காவிரியில் வரலாறு பிறக்க வேண்டும்!

தமிழகத்தினுடைய வரலாறு எங்கேயிருந்து தொடங்கவேண்டும்? இந்திய நாட்டின் வரலாறு எங்கேயிருந்து தொடங்கியிருக்க வேண்டும்? மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை எடுத்துக்காட்டியபடி காவேரிக் கரையிலிருந்து இந்திய நாட்டின்வரலாறு தொடங்கியது. அதுதான் உண்மையான வரலாறாக இருக்க முடியும் ஏனெனில் அவ்வளவு தொன்மை வாய்ந்த மொழிக்கு உரியவர்கள், பண்பாட்டிற்கு உரியவர்கள், கலைக்கு உரியவர்கள் தமிழர்கள் தான். எனவேதான் தெற்கு மூலையிலிருந்து வரலாறு உருவாகவேண்டுமென்று எடுத்துச் சொன்னாரே அதற்கேற்ப தமிழகத்தின் வரலாறு எழுதப்பட வேண்டுமென்று டாக்டர் மு. வரதராசன் அவர்கள் உயிரோடிருந்த காலத்தில் கழக அரசு அவருடைய தலைமையில் பெரும் அறிஞர் அடங்கிய குழுவொன்றை அமைத்து அதில் வரலாற்று வித்தகர்களையும் நிலநூல் பயின்றவர்களையும் இடம்பெற வைத்து தமிழகத்தின் தொல் பழங்காலத்தை வெளியாக்கி இருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள்.

### தமிழரின் உரிமைக்குரல்

இவ்விதம் எல்லாவற்றிலும் தமிழ் சிறக்கவும், தமிழர்கள் நாகரிகம் சிறக்கவும் தமிழர் தம்பண்பாடு சிறக்கவும் இந்தியாவிற்குள் தமிழகம் தன்னாட்சி பெற்று தனி ஆட்சிபெற்றல்ல விளங்கிடவும், உரிமைக் குரல்கொடுத்துக்கொண்டிருக்கிற ஒரு இயக்கம் இங்கே இருக்கிறது.

### எதிர்க்கக் கூடிய சக்திதான்

அந்த இயக்கம் வளருமானால் அது எதிர்காலத்தில் பேராபத்தாக ஆகிவிடும் என்ற எண்ணம், மத்தியில் உள்ளவர்களுக்கு இருந்தது - இருக்கிறது என்று நான் சொல்லவில்லை, இருந்தது என்று சொல்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார் என்பதும் உங்களுக்குப் புரியும். இப்போது இருக்கிறது என்று சொல்லாத காரணத்தால் மறுபடியும் இருக்கவே இருக்காதா என்கிற அந்தக் கேள்விக்கு என்னால் பதிலளிக்க இயலாது இருக்கலாம். அப்போதும் எதிர்க்கக் கூடிய சக்தியாகத்தான் இந்த சக்தி இருக்கும்.

### உடன்பிறப்புகள் உணரவேண்டும்

இங்கு பேசிய பல அன்பர்கள் நெருக்கடி காலத்தில் வெஞ்சிறைகளில் விசாரணையில்லாமல் பூட்டப்பட்டிருந்தவர்கள்தான். தமிழர்களுடைய உயிர்களுக்கு மாத்திரம் உடைமைகளுக்கு மாத்திரம் நெருக்கடி அல்ல. தமிழனுடைய உணர்வுகளுக்கு நெருக்கடி. ஏடுகளில் தமிழ் என்று எழுதினாலே தணிக்கை அதிகாரி எழுதக்கூடாது என்று தடுத்த காலம் ஓராண்டு இருந்தது. அப்படி தடுத்து இந்தியப் பேரரசை ஆதரித்த கட்சிகளும் தமிழ்நாட்டில் இருந்தது. இருக்கின்றன உணர்வின் அடிப்படையில் பேசுகிறேன். அரசியல் அடிப்படையில் பேசவில்லை. தமிழ் உணர்வு அளிக்கப்படவேண்டும் என்ற நிலை இங்கும் இருந்தது என்பதை வெளிநாட்டிலிருந்து வந்திருக்கின்ற உடன்பிறப்புக்கள் உணரவேண்டும்.

### தமிழுக்கு தடை

முரசொலி ஏட்டிலே கழக சார்பான ஏடுகளிலே மேடைகளிலே தமிழ் பற்றி பேசினால் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம்பிள்ளை எழுதிய தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு என்ற கவிதை வரிகளை ஏடுகளில் வெளியிட தடை. தமிழுக்கு அமுது என்று பேர் அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்ற பாரதிதாசனின்வரிகளைஎழுதத்தடை ஏன் கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணியபாரதியின் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடிய பாட்டை பத்திரிகைகளில் எழுதினாலே தடை. தமிழ்-தமிழ்நாட்டு மக்கள் என்று சொல்ல தடை. என்ன காரணத்தாலோ 'ஷா' கமிஷன் இவைகளை எல்லாம் விசாரிக்க முன்வரவில்லை, விசாரிக்க முன்வந்தால் தணிக்கை எதிரிகள் எத்தனை இடங்களில் சிகப்பு மையால் அடித்து வெளியிடக்கூடாதென முத்திரைவைத்தார்கள் என்பதை அங்கே சாட்சிகளாக] வைப்போம்.

### எட்டப்பர் இயற்கையே

அப்படித் தமிழுணர்வு அழிக்கப்படுகிற நேரத்தில் அந்த அரசுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்ற இவர் தமிழகத்தில் இருந்தார்கள். ராவணன் இருந்தால் வீபீடணன் இருந்தே தீருவான். கட்டபொம்மன் இருந்தால் எட்டப்பன் இருந்தே தீருவான் வாலி இருந்தால் சுக்கிரீவன் இருந்தே தீருவான். இது நியதி என்று ஆகிவிட்ட பிறகு நான் அவர்களுக்காக வருத்தப்படவில்லை. அவர்கள் இருந்தால் தான் ஒரு வீர வரலாறு உண்டாகுமென்ற காரணத்தால் கதையில் வில்லன் இல்லாவிட்டால் கதைசோபிக்காது என்பதைப்போல் தமிழுணர்வை அழிக்கின்ற முயற்சி நடைபெற்ற நேரத்தில் அதற்கு இவர்கள் ஆதாரவாக இருந்தார்கள்.

### கறுப்புக்கொடியும் தமிழுணர்வும்

இப்படிப்பட்ட தமிழென்கிற உணர்வையே அழிக்கக்கூடிய திட்டமிட்ட சதிசெயல் இந்தியாவில் மத்திய பேரரசிலிருந்து உருவாகுமானால் தமிழன் தனையும் வடநாட்டிலுள்ள தமிழனையும் காப்பாற்றிக் கொள்ளமுடியாமல் உங்களைப் போன்ற தமிழர்களையும் காப்பாற்றமுடியாத அவலநிலைக்கு ஆளாக நேரிடும் என்பதற்காகத்தான் இந்திராகாந்தி அம்மையாருக்குகறுப்புக்கொடி காட்டினோமே தவிர இன்றைக்கும் சொல்கிறேன் அவரிடம் தனிப்பட்ட பகைமை இடையவே கிடையாது.

### நாங்களும் நீங்களும்

தமிழுணர்வு இன்றைக்கு மீண்டும் தழைத்திடத் தொடங்கியிருக்கிறது. இதனையழிக்க வேறு பல சக்திகள் பயன்படுத்தப்படலாம். அவைகளை எதிர்த்து நிற்கும் சக்தியாக தமிழகத்தில் இன்றைக்கு நாங்கள் வளர்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் உங்களுடைய நாடுகளில் வளர்ந்துகொண்டிருக்கிறீர்கள்.

### போர்க்கருவிகளும் பட்டாளமும்

இங்கே வந்திருக்கின்ற பிரதிநிதிகளை எல்லாம் காணும் நேரத்தில் ஒருவரிருவரைத் தவிர மற்றவர்கள் நல்ல இளைஞர்கள். ஆர்வம் படைத்த இளைஞர்கள்-எதிர்கால தமிழுணர்விற்கு ஆக்கமும் ஊக்கமும் வரவேண்டுமானால் இளைஞர்களை நம்பித்தான் தமிழ் இருக்கிறது என்பதுக்கு எடுத்துக்காட்டாக அவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இப்படிச் சொல்வதால் முதியவர்கள் எல்லாம் இது நமக்குத் தேவையில்லாத பணிபோலும் என்று கருதத்தேவையில்லை. தாங்கள் பெற்ற அனுபவங்களை தமிழின் முன்னேற்றத்திற்கு போர்க்கருவிகளாக அவர்கள்

(6-ம் பக்கம் பார்க்க)


## இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்க வெளியீடுகள்

விற்பனையாகிறது.

ராசிபலன் விலை ரூபா 1-50

- பன்னிரு ராசிகளுக்கும் தனித்தனியே விபரமாக பலன்கள் எழுதப்பட்டுள்ளன.

இரகு தினக்குறிப்பு விலை ரூபா 6-00

1978

- முக்கியமான விரதங்கள் · திதிகள் முதலியன அடங்கியது.

சொற்ப பிரதிகளே அச்சாகியிருப்பதனால் உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

## சோதிடவிலாசபுத்தகசாலை

46, பெரியகடை, யாழ்ப்பாணம்.

8036

## அறிவித்தல்

எமது தரமான தேங்காய் எண்ணெயை எதிர்வரும் புத்தாண்டையொட்டி வாடிக்கையாளர்களின் பாவனைக்காக மிகவும் மலிவான விலையில் கொடுப்பதில் அதாவது சில்லறை விற்பனையாகிய போத்தல் விற்பனையில் போத்தல் 3/25-க்குக் கொடுப்பதில் சி. எஸ். கே. ஸ்தாபனத்தாராகிய நாம் மிகவும் பெருமையடைகின்றோம். இவ்விற்பனை இன்றிலிருந்து 31-12-77 வரைநடைபெறும் ஆகவே இன்றிலிருந்து 31-ம் திகதிவரை 1 கலன், போத்தல் ஆகிய விற்பனைகள் மட்டுமே எமது சில்லறை, விற்பனைக் கடையாகிய "றமணாஸ் றேடிங்ஸ்" (வள்ளுவர் சிலைக்கு முன்பாக) கடையில் நடைபெறும்.

### சி. எஸ். கே. ஸ்தாபனம்

யாழ்ப்பாணம்.

8028

# புதுடில்லியில் காங்கிரஸ் (போட்டி) மகாநாடு: இந்திரா முயற்சிக்கு சவான், ரெட்டி எதிர்ப்பு!



## காங்கிரஸ் கட்சி பிளவுபடுவது தவிர்க்க முடியாததாகி விட்டது!



புதுடில்லி, டிச. 28

அகில இந்திய காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளவுபடுமா? அடுத்த வாரம் நடைபெறும் இந்திராகாந்தி ஆதரவு மகாநாட்டைத் தொடர்ந்து, காங்கிரஸ்கட்சி இரு பிரிவுகளாகும் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### முதலாம் திகதி மகாநாடு

ஜனவரி மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை புதுடில்லியில் காங்கிரஸ்(போட்டி) மகாநாடு நடைபெறுகிறது. இந்த மகாநாட்டில் திருமதி இந்திராகாந்தியின் ஆதரவாளர்கள் கலந்துகொள்கின்றனர்.

### ஏழுபேர் ராஜினுமா

இந்த மகாநாட்டை ஒரு பலப்பரீட்சையாக நடத்த திருமதி காந்தியின் ஆதரவாளர்கள் திட்டமிட்டிருக்கும் அதே நேரத்தில்; ஒரு முன்னோடி நடவடிக்கையாக நேற்று திருமதி இந்திராகாந்தியின் ஆதரவாளர்கள் ஏழுபேர் காங்கிரஸ் காரியக்கமிட்டியிலிருந்து ராஜினுமாச் செய்துள்ளனர்.

காங்கிரஸ் காரியக்கமிட்டியிலிருந்து திருமதி இந்திராகாந்தி முன்னரே ராஜினுமா செய்திருப்பது தெரிந்ததே.)

இதேநேரத்தில், இந்த காங்கிரஸ் மகாநாடு கூட்டப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களிடமிருந்து கடுமையான கண்டனம் கிளம்பியிருக்கிறது.

### "போட்டி மகாநாட்டில் கலந்துகொள்ளாதீர்"

முதலாம் திகதி நடைபெறும் காங்கிரஸ் மகாநாட்டை "போட்டி மகாநாடு" என்று வர்ணிக்கும் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு பிரமானந்தரெட்டியும் காங்கிரஸ் பார்லிமென்டரிக் குழுத் தலைவர் திரு. வை. பி. சவானும் கூட்டாக விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் "ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் காங்கிரஸ் போட்டி மகாநாட்டில் கலந்துகொள்ள வேண்டாம்" என்று காங்கிரஸ் உறுப்பினர்களைக் கேட்டுள்ளனர்.

"காங்கிரஸ்கட்சியைப்பிளவு படுத்தவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே காங்கிரஸ் போட்டி மகாநாடு கூட்டப்படுகிறது. தனிநபரின் ஒரு விளையாட்டுக் கருவியாக காங்கிரஸ் கட்சி செயல்பட முடியாது" என்று கூட்டு அறிக்கையில் தெரிவித்திருக்கும் திரு. பிரமானந்தரெட்டியும், திரு வை பி. சவானும் மேலும் தெரிவிப்பதாவது,

"சொந்த நோக்கம் காரணமாகவே இந்தப் போட்டி மகாநாடு நடத்தப்படுகிறது. பிளவு ஏற்படுத்தவேண்டும் என்பது தான் இம்மகாநாட்டைக் கூட்டுவோரின் ஒரேநோக்கம். இதனை நாம் அனுமதிக்க முடியாது.

"திருமதி இந்திராகாந்தியின் முயற்சியினுல்தான் காங்கிரஸ் கட்சியில் அரசியல் தேக்கநிலை ஏற்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு எதிராகக் கூட்டப்படும், இம்மகாநாட்டில் உண்மையான காங்கிரஸ்காரர்கள் கலந்துகொள்ளக் கூடாது" என்று இரு தலைவர்களும் காங்கிரஸ் ஆதரவாளர்களை கேட்டுள்ளனர்.

### பக்தவத்சலம் கோரிக்கை

முன்னுள் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் நேற்றுசென்னையில்விடுத்த அறிக்கையில்; காங்கிரஸ்கட்சி மீண்டும் பிளவுபடக்கூடாது; காங்கிரஸ் ஒற்றுமை எந்தவிதத்திலும் பாதுகாக்கப்படவேண்டும்" என்று கோரியுள்ளார்.

"காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு தலைதூக்குவது தவிர்க்கப்படவேண்டும். இதனடிப்படையில் காங்கிரஸ் கட்சியினர் செயல்படவேண்டும்.

"காங்கிரஸ் அமைப்புக்குத்தான் நாம் ஆதரவளிக்கமுடியுமே தவிர, தனிப்பட்டவர்களுக்கு அல்ல. காங்கிரஸின் ஒற்றுமையைக் காப்பாற்ற உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று திரு. எம். பக்தவத்சலம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்,

### ஐ. நா. சங்கம் நன்றி

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணம் பழைய மார்க்கட்டில் எரிந்தகடைகளின் உரிமையாளர்களுக்கு நீதியான முறையில் நிவாரண நிதி வழங்கப்பட்டதற்குச் சம்பந்தப்பட்டவர்களுக்கு பெரியகடை மார்க்கட் ஐக்கிய நாணய சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு. த. சுப்பிரமணியம் நன்றி தெரிவித்துள்ளார்.

இவ்விஷயத்தில் அக்கறை செலுத்திய யாழ். எம். பி. வெ. யோகேஸ்வரன், கோப்பாய் எம்.பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை ஆகியோருக்கும், சமூக சேவை உதவிக் கமிஷனர் திரு எஸ். கெங்காதரன், உத்தியோகஸ்தர் திரு பரராஜசிங்கம் கடைக்காரருக்குச்சிரமம் ஏற்படாதவகையில் நேரடியாக விசாரணை நடத்தி ஒத்துழைத்தகிராம சேவையாளர் திரு. தளையசிங்கம் ஆகியோருக்கும் அரசாங்க அதிபர் திரு டபிள்யு ஏ. எல். விஜயபாலாவுக்கும் அவர் தமது நன்றியைத் தெரிவித்துள்ளார். (அ

தமிழக வெள்ள நிவாரணம்:

### பிரதமர் தேசாய் மேலும் ரூ. 10 லட்சம் உதவுகிறுர்

சென்னை, டிச 28 பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் தமது தேசிய நிவாரணநிதியிலிருந்து மேலும் பத்து லட்சம் ரூபாவை தமிழ்நாடு புயல் வெள்ள நிவாரணநிதிக்கு வழங்கியுள்ளார்.

இதுவரை மேற்படி நிதியில் இருந்து தமிழ்நாட்டிற்கு இத்தொகையுடன் 51 லட்சம் ரூபா கொடுக்கப்பட்டுள்ளது.

### திடீர் விஜயங்களை மேற்கொள்வார் 'அமைச்சர்

(கண்டி)

பாடசாலைகளின் நிலைமைகள் தரங்கள்பற்றி நேரில் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் கல்வி அமைச்சர் திரு நிஸங்கா விஜயரட்ன பாடசாலைகளுக்கு திடீர்விஜயங்களை அடுத்த ஆண்டு முதல் மேற்கொள்வதற்கு தீர்மானித்திருக்கிறுர்.

இம்மாதிரியான திடீர்விஜயங்களின்போது அமைச்சர் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் பிரச்னைகள் குறித்து அந்த இடங்களிலேயே முடிவுகள் எடுப்பார். இப்பிரச்னைகள் தொடர்பாக அவர் அப்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் போன்றோருடன் ஆலோசனை நடத்துவார்.

அமைச்சர் இவ்வாறு திடீர் பிரயாணங்களை மேற்கொள்ளும்போது அமைச்சின் முக்கிய நடவடிக்கைகளை பிரதி அமைச்சர் திரு. லயனல் ஜயத்திலக்க கவனித்துக்கொள்வார். நிர்வாகப் பிரச்னைகளை அமைச்சின் செயலாளர் திரு. டி. எம். பி. பி. தஸநாயக்கா கவனிப்பார். இதற்கான ஏற்பாடுகளையும் அமைச்சர் செய்துள்ளார்.



யாழ்ப்பாணம் குருநகர் அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் திரு ஜே டியூக் அண்மையில் தமிழகம் சென்றிருந்தபோது நிதி அமைச்சரும், அ.இ அ தி.மு க.வின் துணைத் தலைவருமான திரு நாஞ்சில் மனேகரனை சந்தித்தபோது எடுத்தபடம்.

திரு நாஞ்சில் மனேகரன் ஜே. டியூக்கிடம் குருநகரில் நிறுவப்பட்டுள்ள அறிஞர் அண்ணுதுரையின் உருவச்சிலை பற்றிப் புகழ்ந்துரைத்ததுடன் "இலங்கையிலிருந்துவரும் அண்ணுவின் மீதும், அண்ணுவின் அருமைத்தம்பி எம் ஜி. ஆரின் மீதும் பற்றுள்ள தொண்டர்களுக்காக கழகத்தின் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும்" என்றும் கூறினுர் (ஊ)

சுன்னுகம்

# பெட்ரோல்நிலையக்கொள்ளை: கார்ச்சாரதி றிமாண்டில்

(மாவிட்டபுரம்)

சுன்னுகம் பெற்றோல் நிரப்பு நிலையக் கொள்ளை தொடர்பாகக் கைதான கார்ச் சாரதியை மல்லாகம் நீதிபதி றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பெற்றோல் நிரப்புநிலையத்தில் காரில் வந்த 3 இளைஞர்கள் சுமார் 6 ஆயிரம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றது தொடர்பாக விசாரணை செய்த சுன்னுகம் பொலிசார் இதில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் வசாவிளானைச் சேர்ந்த தம்பன் நடராசா என்பவரைக் காருடன் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

அச்சமயம் நீதிபதி அவரை அடுத்தமாதம் 3ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இந்நபரது சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராஞர்.

மேற்படி கார்ச்சாரதி சுன்னுகம் பொலிசாருக்கு அளித்துள்ள வாக்குமூலத்தில் தமக்கு இதுபற்றி எதுவும் தெரியாதெனவும், தமது காரை வாடகைக்கு அமர்த்திய இளைஞர்கள் தம்மைப் பலவந்தமாகக் கட்டிப்போட்டு அக்காரில் பல இடங்களுக்குச் சென்றதாகவும் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தின் முன் விட்டுச் சென்றுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பொலிசார் புலன்விசாரணைசெய்து வருகின்றனர். இன்னும் எவரும் பொலிசாரிடம் சிக்கவில்லை.



காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையின் புதிய கட்டிடத்தில் முதலாவது காப்புறுதி பிரேரணையை யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் சமர்ப்பிக்கும் போது எடுக்கப்பட்டபடம். இடமிருந்துவலம் திரு. அன்ரன் விவரத்ன, த. சண்முகநாதன், வே. அ. திருஞானசுந்தரம், இ. கீர்த்திசிங்கம் (கிளை முகாமையாளர்), வெ. யோகேஸ்வரன் எம். பி.

# யாழ். எம். பி.
## முதலில் சமர்ப்பித்தார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையின் புதிய கட்டிடத் திறப்பு விழாவன்று மொத்தம் சுமார் 12 இலட்சம் ரூபாவுக்கான காப்புறுதிப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன. முதலில் தமது காப்புறுதி பிரேரணையைச் சமர்ப்பித்தவர் யாழ். தொகுதியின் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் ஆவார். திரு. யோகேஸ்வரனே கட்டிடத்தை திறந்துவைத்தார் என்பது தெரிந்ததே.

திறப்புவிழாவன்று சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைத் தொகைகளுடன் சேர்த்து இவ்வாண்டு ரூ. 31,510,000/-வுக்கான ஆயுட்காப்புறுதிப் பிரேரணைப் பத்திரங்கள் கிளை அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதன்மூலம், இந்தக் கிளைக்கென ஒதுக்கப்பட்ட காப்புறுதித் தொழில் 'கோட்டா'வைவிட அதிகமான தொகைக்கு ஆயுட்காப்புறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பொது காப்புறுதியைப் பொறுத்தவரை, அதன் ஒரு அம்சமான மோட்டார் காப்புறுதி செய்யப்பட்ட மோட்டார்கார்களுக்கு சமீபகலவரத்தில் ஏற்பட்ட நஷ்டத்துக்கு ஈடாக, மொத்தம் அத்தகைய ஆறு மோட்டார் வாகனங்கள் மீதான பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும், அதற்குரிய பணம் விரைவில் வழங்கப்படும் என்றும், திறப்புவிழாவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உரும்பராய் துப்பாக்கி அபகரிப்பு:
# சந்தேக நபர்கள் எவரும் அடையாளம் காணவில்லை

(மாவிட்டபுரம்)

உரும்பராய்ப் பகுதியில் இடம்பெற்ற 3 துப்பாக்கி அபகரிப்புச் சம்பவங்கள் தொடர்பாக நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் சந்தேக நபர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை.

உரும்பராயைச் சேர்ந்த என். பொன்னுத்துரை, என். செல்லத்துரை, ஆ. முத்துவேலு ஆகியோரது வீடுகளுக்குள் அத்துமீறிப் புகுந்து அவர்களைக் கொலை செய்வதாகப் பயமுறுத்தி அவர்களிடமிருந்த துப்பாக்கிகளை அபகரித்தது தொடர்பாக யாழ் ஒட்டுமடத்தைச் சேர்ந்த எம். சந்திரன், ஆர். உதயகுமார், எம். தங்கராசா ஆகிய நபர்களை சுன்னாகம் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தினர்.

மல்லாகம் பதில் நீதிபதி திரு ஆர்.ஜே.செல்வரத்தினம் முன்னிலையில் நடந்த இந்த அடையாள அணிவகுப்பில் சந்தேக நபர்களில் எவரும் அடையாளம் காணப்படவில்லை.

இச்சந்தேக நபர்கள் குறித்து வேறும் அடையாள அணிவகுப்புக்கள் நடத்தப்பட இருப்பதால் இவர்களை ஜனவரி 13-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நபர்கள் யாழ். நீதிபதி முன் கைக்குண்டு வீச்சு, பெண்களுடன் விஷமம் ஆகியன தொடர்பாக ஆஜர் செய்யப்பட்டு அடையாளம் காணப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# "கடவுள் இருப்பதற்கு கருணாநிதி உதாரணம்"

(யாழ்ப்பாணம்)

"மாணிக்கவாசகர் முதன் மந்திரியாக விளங்கி குதிரை வாங்கும் பொறுப்பைப் பாண்டிய மன்னனிடம் ஏற்றவர். கலைஞர் கருணாநிதியும் முதன் மந்திரியாக விளங்கி ஏழை மக்களை வாழவைத்தவர். மக்கள் சேவையை மகேசுவரன் சேவையென மதித்தவர். பாண்டியன் மாணிக்கவாசகரைப் பிடித்துச் சித்திரவதைசெய்து மறியல் வைத்தபோது வைகையாறு பொங்கி எழுந்து மதுரை மாநகரை அழித்தது. அதேபோன்று கலைஞர் கருணாநிதியை மத்திய அரசும் மாநில அரசும் சிறையுள் வைத்தபோது பெருவெள்ளப் பிரளயம்போல் ஏற்பட்டுப் பல்லாயிரவர் மாண்டனர். வரலாறு காணாத சேதம் விளைத்தது. இது கடவுள் ஒருவர் உள்ளார் என்பதைக் காட்டுகின்றது. கருணாநிதி வெளியால் விடப்பட்டதும் மழையும் மறைந்தது."

இவ்வாறு கல்வயல் வேதவனப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் கோவில் பரிபாலன சபையினர் எடுத்த திருவாசகவிழாவில் சிறப்புரை வழங்கிய ஆசிரியமணி ஆர். சி. சுப்பிரமணியம் கூறினார். விழாவுக்கு சைவசிவமணி சங்கீதபூஷணம் சி. விஜிதம்பி தலைமைவகித்தார்.

தொடர்ந்து பேசிய திரு. சுப்பிரமணியம், வியாக்கிரபாதர் கோவிலுக்குப் பூ எடுக்கும் தொண்டை மந்திரம் மேற்கொண்டு இறைவனை அடைந்தார் நாமும் பொருள் இல்லாவிடினும் திருநீறு தயாரித்துக் கோவிலுக்கு உபகரித்தல் போன்ற ஒரே ஒரு தொண்டைச் சிரமேற் கொண்டே இறைவனை அடையமுடியும்" என்றார்.

பண்டிதர் க வேலுப்பிள்ளை, வித்துவான் வே.ஆறுமுகம், ஆசிரியர் வே சின்னத்துரை, திரு.வா.கதிரேசபிள்ளை ஆகியோரும் பேசினர். திரு. இ. விநாசித்தம்பியின் இன்னிசை விரிவுரையும் இடம்பெற்றது. [அ]

# 'முடிவுகளை ஏற்கத்தூண்டுவதல்ல தொழிலாளர் கல்வி'

[வவுனியா]

"தொழிலாளர் கல்வி என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முடிவுகளை ஏற்குமாறு தூண்டுவதாக இருக்கக்கூடாது. தொழிலாளர் கல்வியிலே அவர்களின் அடிப்படை அறிவு, கடமை, சலுகை என்பவைவற்றை அறியவைப்பதுடன் அவர்களுடைய ஆளுமையை உயர்த்தி மற்றவர்களால் அவர்கள் மதிக்கப்படத்தக்கதாக மாற்றவேண்டும். இதுவே தொழிலாளர் கல்வியின் நோக்கமாகும்" என்று வவுனியா கூட்டுறவுப் பயிற்சிக்கலாசாலையில் தொழில் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட 'தொழிற்சட்டம், குடும்ப நலம்' என்னும் பொருள்பற்றிய முதலாவது நாள் கருத்தரங்கில் தொழில் அதிகாரி திரு. தா. விமலராஜ் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், விஞ்ஞான ரீதியிலும், கலாச்சாரரீதியிலும் வாழ்க்கையை அணுகவேண்டும் என்றும், வேண்டாமெனப் பெறும் பிள்ளைகளே சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்றும், குடும்பத்தைத் திட்டமிட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

வவுனியா கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. ஏ. மகேஸ்வரா கூட்டுறவு ஆணைக்குழுச் சட்டம்பற்றி பேசினார். தொழிலாளரின் பாதுகாப்பு நலன் விஷயத்தில் ஆணைக்குழு முக்கிய கவனம் செலுத்திவருவதாக அவர் கூறினார். இதில் பல தொழிற்சங்க அங்கத்தவர்களும் கலந்துகொண்டார்கள். (அ)

# பதிவாளராக நியமனம்

[மாவிட்டபுரம்]

வலி. வடக்குப்பகுதி பிறப்பு இறப்பு, விவாகப் பதிவாளராக இளவாலை பத்தாவத்தையைச் சேர்ந்த திரு. வி. சண்முகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொல்லங்கலட்டியில் அமைத்துள்ள இப்புதிய பதிவாளரது அலுவலகத்தை யாழ். பதிவாளர் செயலகப் பதிவாளர் திரு. இ. கதிர்காமலிங்கம் திறந்து வைத்ததுடன் புதிய பதிவாளருக்கான நியமனப்பத்திரங்களையும் வழங்கினார்.

இவ்வைபவத்தில் வலி.வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க மகாதேவாவும் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றினார்.

மற்றும் அதிபர் திரு. ஆர். சண்முகரத்தினம், அதிபர் திரு. வ. மகாலிங்கம் உட்படப் பலர் பேசினர். [அ]

## யாழ. லயன்ஸ்கழக
# உதைபந்தாட்டப் போட்டிக்கு பல கழகங்கள் ஆதரவு

[யாழ்ப்பாணம்]

யாழ். லயன்ஸ் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டிக்கு இதுவரை பல கழகங்கள் தமது ஆதரவை அளித்துள்ளன.

அவை இலங்கைக்கோஷ்டிகளான கொழும்பு சவுண்டர்ஸ் கழகம், விக்ரறிகழகம், ரட்ணம் கழகம் இலங்கைப் பொலிஸ் கழகம் மட்டக்களப்பு மாநகரசபை பொழுதுபோக்குக் கழகம் திருகோணமலை விளையாட்டுக் கழகம் பஷையூர் சென்.அந்தோனிஸ் கழகம் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் ஆகியன இப்போட்டியில் விசேஷமாகக் கலந்து கொள்கின்றன.

இப்போட்டியின் மற்றுமொரு அம்சமாக பாடசாலை மாணவரிடையேயான போட்டியை மகாஜனக்கல்லூரிக் கோஷ்டியும் இளவாலை சென் ஹென்றீஸ் கோஷ்டியும் மோதுகின்றன.

போட்டிக்கான ஒழுங்குகளை யாழ். லயன்ஸ் கழகமும் யாழ். உதைபந்தாட்ட லீக்கும் செய்துவருகின்றன. அனுமதிச் சீட்டுக்களில் மோசடிகள் இடம்பெறுமல் இருப்பதற்கு ஒவ்வொருநாளும் வெவ்வேறு நிறங்களில் டிக்கட்டுகள் விற்பனை செய்யப்படுமாம்.

விளையாட்டரங்கில் லயன்ஸ் மாதர்கள் தேநீர்ச்சாலையொன்றையும் நிறுவி சேவையாற்றவுள்ளனர். [கே-அ]

# மயிலிட்டியில் இன்று நடக்கும் ஒளிவிழா

[மாவிட்டபுரம்]

மயிலிட்டி அரசினர் மார்பு நோய் வைத்தியசாலையில் இன்று வியாழக்கிழமை ஒளிவிழா கொண்டாடப்பட உள்ளது.

இவ்விழாவில் கும்மி, கிறிஸ்மஸ்தாத்தா வருகை, நடனம், நாடகம், கோலாட்டம் போன்ற பல நிகழ்ச்சிகள் இடம் பெற உள்ளன.

இவ்விழாவை உரும்பராய், வினான், பண்டத்தரிப்பு, இளவாலை ஆகிய இடங்களிலுள்ள கிறிஸ்தவ ஆலயங்களைச் சேர்ந்தவர்கள் தயாரித்து அளிக்கிறார்கள்.

இவர்களது ஒளிவிழா தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியிலும் நேற்று விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. [அ]

# வவுனியா புதிய பஸ்டிப்போ அடுத்தமாதம் திறக்கப்படும்

(வவுனியா)

வவுனியாவில் கட்டப்பட்டு முடிவுறும் நிலையில் இருக்கும் இ. போ. ச. டிப்போ கட்டடத்தை எதிர்வரும் தை மாதம் முடிவதற்குள் கட்டி முடித்துக் கையளிக்குமாறு போக்குவரத்து அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார். இத்தகவலை வவுனியா தேசியப் பேரவை உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

இந்த டிப்போவில் இயந்திரப் பொறியியல் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதும் வவுனியாவில் பஸ் சேவை சீரடையும் என்றும் அவர் தெரிவித்தார். இப்புதிய டிப்போ அடுத்த மாதம் பிற்பகுதியில் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தங்கச் சங்கிலி மீட்பு

(நெல்லியடி)

நெல்லியடிச் சந்தையில் வைத்து தாயுடன் இருந்த ஒரு குழந்தையிடம் திருடப்பட்ட 2000 ரூபா பெறுமதி மிக்க தங்கச்சங்கிலி வரணியில் வைத்து மீட்கப்பட்டது.

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த பெண் ஒருவர் தம குழந்தையுடன் சந்தைக்கு வந்திருந்தபோதே இச்சம்பவம் நடந்தது. (உ)

# மூளாய் ஆஸ்பத்திரியில்

[யாழ்ப்பாணம்]

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் மாலை 4 மணிமுதல் 6 மணிவரை யாழ். ஆஸ்பத்திரியைச் சேர்ந்த வைத்திய நிபுணர் ஒருவர் வருகைதந்து நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பார்.

# சுதந்திரக்கட்சிக்குப் புத்துயிர்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குப் புத்துயிர் ஊட்டுவதற்கான முயற்சிகள் ஆரம்பமாகியிருப்பதாகத் தெரியவருகிறது.

பழம் தலைகள் பல வெளியேற்றப்பட்டு புதிய தலைமுறையினரிடம் கட்சிப் பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்படுவதுடன் சில முன்னைய அமைச்சர்கள் மற்றும் சில முக்கியபிரமுகர்களுக்குக் கூட கட்சியிலிருந்து கால்தா கொடுக்கப்படலாமென தெரியவருகிறது. [இ]

சுரி

∴ கலண்டர்கள் ∴ டயறிகள் ∴ பிளாஸ்டிக டயறிகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். வடபகுதி விநியோகஸ்தர்கள்
S. P. சாமி அன் கொம்பனி
193, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

RIO (Jaffna) Daily 4 Shows
EYE WITNESS

Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 & 9-30 P. M. only
NIGHT OF THE EAGLES
(Color)

ராணி தினசரி 10-30, 2.30 ,6·00, 9.30.
எம். ஜி. ஆர்.-விஜயா, நாகேஷ்
[யாழ்ப்பாணம்] நடித்த
வி வ சா யி
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி...... தேவிகா...... நாகேஷ்......
"நீலவானம்" கதைவசனம்: K பாலசந்தர் (புதிய பிரதி)
அடுத்த வெளியீடு கலைஞர் கருணாநிதியின்
பூம்புகார் (புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
முத்தான முத்தல்லவோ

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7698
நீதிக்கு தலைவணங்கு

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஓய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி

யாழ். மாவட்டத்தில் ராஜா திரையரங்கில்மட்டும் எல்லாக்காட்சிகளுக்கும்
தமிழ்த்தலைவர் அமரர் தந்தை செல்வாவின் இறுதியாத்திரைக்காட்சி காண்பிக்கப்படும்.
எஸ். பி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு
[தினசரி காட்சி நேரங்கள்:
10-15, 2-00, 6-00, 9-45]
ஜெமினி - கே. ஆர். விஜயா
சீர்காழி கோவிந்தராஜன் - விஜயகுமாரி
நடித்த
P. V. C. தயாரிப்பு
தசாவதாரம்
(கலர்)
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

## மாவு, அரிசி விலையில் மாற்றம்

(கொழும்பு)

நாட்டில் தற்பொழுது கைவிருப்பிலுள்ள மாவின் அளவுபற்றி அரசு மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டுள்ளது. மாவின் விற்பனையில் மாற்றங்கள் செய்யும் நோக்குடனேயே இந்த மதிப்பீடு மேற்கொள்ளப் படுவதாகத் தெரிகின்றது

மாவின் விலையில் மாற்றம் வருமானால் அரிசியின் தற்போதைய விலையிலும் மாற்றம் செய்யப்படும் என்று தெரிகின்றது.

1977—78ம் ஆண்டில் உலக கோதுமை உற்பத்தி எதிர்பார்க்கப்பட்ட அளவுக்குக் குறைவாகவே இருக்கும் என்ற அறிக்கைகளைத் தொடர்ந்தே அரசு மேற்படி மதிப்பீடுகளைச் செய்யத் தொடங்கியிருக்கின்றது.

# காற்பந்தாட்ட நடுவர்கள் கருத்தரங்கும் தேர்வும்

## அடுத்தமாதம் நாடெங்கும் நடக்கும்

(மாவிட்டபுரம்)

காற்பந்தாட்ட நடுவர்களுக்கான பயிற்சிக்கருத்தரங்கும் தேர்வும் அடுத்த மாதத்தில் நாடுபூராவிலும் நடத்தப்பட உள்ளன.

இலங்கை காற்பந்தாட்ட நடுவர் மன்றத்தின் ஆதரவில் கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், கேகாலை, மட்டக்களப்பு, திருகோணமலை, அனுராதபுரம், பலாங்கொடை, களுத்துறை ஆகிய பத்து இடங்களில் இக்காற்பந்தாட்டப்பயிற்சிக்கருத்தரங்கும் தேர்வும் இடம்பெற உள்ளன.

காற்பந்தாட்ட நடுவர்களாக உள்ளவர்களுக்கு இத்துறை பற்றி நன்கு விளக்கி அவர்களை இத்துறையில் மேலும் முன்னேற்றி சிறந்த நடுவர்களாக உருவாக்குவதுடன் இத்துறையில் ஆர்வம் கொண்ட விளையாட்டு அலுவலர்கள், உடற்பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள், மற்றும் காற்பந்தாட்டத்தில் ஈடுபாடு கொண்டோர் ஆகியோருக்கும் பயிற்சியளித்துப் புதிய நடுவர்களை உருவாக்கவும் இப்பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற உள்ளது. அடுத்தமாத முற்பகுதியில் கருத்தரங்கும் இறுதிப் பகுதியில் தேர்வுகளும் இடம் பெறவுள்ளன.

இதில் பங்குபற்றிப்பயிற்சி பெறவிரும்புவர்கள் கொழும்பிலுள்ள இலங்கை காற்பந்தாட்டநடுவர் மன்றச்செயலாளர் திரு எம். ரி. பெர்ணாந்துவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

இனக் கலவரத்தின்போது பாதிக்கப்பட்டு வடபகுதிக்கு வந்து நெடுங்கேணி டொலர் குடியேற்றத்தில் குடியேறிய ஏழு பிள்ளைகளின் தந்தை, உழவு இயந்திரத்தினால் நசியுண்டு மாண்ட பரிதாப சம்பவம் ஒன்று நெடுங்கேணியில் நிகழ்ந்துள்ளது.

க. கறுப்பையா என்பவரே [46 வயது] இவ்வாறு மரணமானவராவார். இவர் மலோ பகுதியில் வசித்துவந்ததாகவும் அண்மையில் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தை அடுத்து நெடுங்கேணிப்பகுதியில் குடியேறியதாகவும் தெரிய வந்தது.

இம்மரணம் தொடர்பான விசாரணையை நெடுங்கேணிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. காராளசிங்கம் நடாத்தினார். விசாரணையின்போது, புதையுண்ட உழவு இயந்திரம் ஒன்றை இவர் வெளியே எடுக்க முற்பட்டபோது அந்த உழவு இயந்திரம் புரண்டதாகவும், அதன் அடியில் சிக்கிய இவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் விபத்து மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. [கா]

# பஸ்மீது கல்லெறிந்து கலாட்டா செய்தாராம்

(பண்டத்தரிப்பு)

பஸ்ஸில் கலாட்டா செய்தார் என்று கூறப்படும் நபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கீரிமலையில் இருந்து வந்து கொண்டிருந்த இ. போ. ச. பஸ்ஸின் மிதிபலகையில்நின்று பிரயாணம் செய்த எஃப். அந்தோனிப்பிள்ளை என்ற நபர் இளவாலையில் வைத்து கலாட்டா செய்தாராம். மிதிபலகையிலிருந்து பிரயாணம் செய்யவேண்டாம் என்று கேட்டபோது இவர் வாக்குவாதப்பட்டதாகவும் பஸ்மீது கல்லெறிந்து முன் கண்ணாடிகளை உடைத்ததாகவும் 125 ரூபா வரை சேதமேற்படுத்தியதாகவும் சங்கானைப் பொலிஸில் இப்பஸ்ஸின் சாரதி பேர்ணட், என்பவர் புகார் செய்துகொண்டதன் பேரில் பொலிஸார் இவரைக் கைது செய்தனர். பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. இராசையாவும் கான்ஸ்டபிள் எல் ஏ குணரத்னவும் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர். சந்தேக நபர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு நீதிபதியின் உத்தரவின்மீது 28-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஹண்டியின் ஞாபகார்த்தமாக

# அஞ்சலிக் கூட்டம் நடத்தமுடிவு

(யாழ்ப்பாணம்)

அமரர் ஹண்டி பேரின்பநாயகத்தின் நினைவாக அஞ்சலிக் கூட்டமொன்றினை எதிர்வரும் ஜனவரி 15-ம் திகதி நடத்துவதென்றும், ஞாபகார்த்த மலரொன்றை வெளியிடுவதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

சென்ற 27-ம் திகதி அமரர் ஹண்டி பேரின்பநாயகத்தின் நண்பர்கள், மாணவர்கள், அபிமானிகள் ஆகியோர் நடத்திய கூட்டத்தில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தை நடத்தவும் ஞாபகார்த்த மலரை வெளியிடவும் ஏற்படும் செலவுகளை சமாளிப்பதற்காக பொதுமக்களிடமிருந்து நன்கொடை பெறுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் பொருளாளராக திரு. எஸ். ஏ. கனகரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார். நன்கொடைகள் அனுப்புபவர்கள் திரு. எஸ். ஏ. கனகரட்ணம், 6 ஏ சீவியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## பாஷையூரில் நத்தார் விழா

[மாவிட்டபுரம்]

பாஷையூர் மக்கள் முன்னேற்ற சனசமூகநிலைய ஆதரவில் ஒளிவிழா நிலைய அரங்கில் கொண்டாடப்பட்டது.

திரு. ஏ. செபஸ்தியான் தலைமையில் நடந்த இவ்விழாவில் பிரதம அதிதியாக வண. பிதா மகேந்திரன் இராசநாயகம் அடிகளாரும், யாழ். லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் சுப்பிரமணியமும் கலந்துகொண்டனர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [அ]

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி, 2-30, 6-30, 9-30
ஆனந்தன்—ராமதாஸ்
வீரத்திருமகன்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30,
சிவாஜி -சரோஜாதேவி
விடிவெள்ளி

நாகமஸ்
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம்.ஜி ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

ஆசிரியருக்குக்கடிதம்:

## தமிழ்ப்பத்திரம் இல்லை

யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புக் கணக்குத் திறப்பதற்கான விண்ணப்பப்பத்திரம் தமிழில் இல்லை என்கிறார்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே இப்பத்திரங்கள் இருக்கின்றனவாம்.

இதனால் பொதுமக்கள் குறிப்பாக ஆங்கிலமோ சிங்களமோ தெரியாதவர்கள் பெரிதும் கஷ்டப்படுவதோடு, தமிழில் பத்திரம் இல்லாமையால் கணக்குத் திறக்க முடியாமல் இருக்கிறது. இதற்கு வங்கியின் மேலிடம் ஆவன செய்யவேண்டும்.

ஆ. தசிகரத்தினம்
காரைநகர்

## எல். எல். பி. பரீட்சையில் டாக்டர் சித்தி

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகக் கொழும்பு வளாகம் இவ்வாண்டு நடத்திய எல். எல். பி. சட்ட இறுதிப் பரீட்சையில் நயினாதீவைச் சேர்ந்த டாக்டர் தியாகர் திருநாவுக்கரசு சித்தியடைந்துள்ளார். நயினாதீவு திரு. தியாகர் திருமதி அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரான இவர் நயினைநாகபூஷணி அம்மன் ஆலயத் தருமகர்த்தாக்களில் ஒருவராகவும் இவ்வாலய திருப்பணிச்சபைத் தலைவராகவும் இருந்துவருகிறார். நயினாதீவு மகாவித்தியாலயம், யாழ். மத்தியகல்லூரி ஆகியவற்றின் பழையமாணவரான இவர் நயினாதீவில் முதலாவது ஆங்கில மொழி சட்டப்பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கில வைத்தியத் தொழிலில் திறமை பெற்ற இவர் சட்டத்தொழிலைச் சமய வளர்ச்சிக்காகவே பெரும்பாலும் பயன்படுத்தப் போகிறாராம். (அ)

### மணிவாக்கு

பயமின்றி நேசமில்லை என்று பலர் கூறிக்கொள் கின்றனர் உண்மை என்னவென்றால், எங்கே பயமிருக்கின்றதோ அங்கே உண்மையான நேசமில்லை.

—காந்திமகான்.

ஈழநாடு
The Eelanaadu

## அரசியலமைப்புத் திருத்தத் தெரிவுக் குழு

அரசியலமைப்பில் திருத்தம் செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள பேரவைத் தெரிவுக்குழு அடுத்த மாதம் ஏழாந் தேதி கூடுகிறது.

அரசியலமைப்புக்குப் பொதுமக்கள் அனுப்பியுள்ள மகஜர்களையும், கேள்விக்கொத்துக்குப் பொதுமக்கள் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களையும் இத்தெரிவுக் குழு, சுமார் இரண்டு வாரகாலம் பரிசிலனைசெய்யுமென்றும், அவசியமானவர்களென்று கருதும் சிலரைத் தெரிவுக்குழு நேரில் அழைத்து அவர்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்துகொள்ளுமென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விசாரணைகளை அடிப்படையாக வைத்து அரசியலமைப்பைத் திருத்துவதற்கான நகல் மசோதா ஒன்றைத் தெரிவுக்குழு தயாரிக்கும்.

இந்த நகல் மசோதா, மந்திரிசபையின் அங்கீகாரம் பெற்ற பின்னர் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுச் சுமார் பத்துத் தினங்கள் விவாதிக்கப்படும். பேரவையின் அங்கீகாரம் பெறுவதுயாவும் பெப்ரவரி இரண்டாந் தேதிக்குள் முடிந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைத் தலைவராகக் கொண்ட இத்தெரிவுக் குழுவில் அமைச்சர்கள் சிலரும், முன்னாள் பிரதமரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, மதவாச்சி எம். பி.யும், முன்னாள் அமைச்சருமான திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோரும், நுவரெலியா-மஸ்கெலியாத் தொகுதி மூன்றாவது எம். பி யும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவைகளின் தலைவருமான திரு. எஸ். தொண்டமானும் அங்கம் வகிக்கின்றனர்.

இத்தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் மறுத்துவிட்டனர்.

சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சர்வகட்சிகளின் மாநாட்டைக் கூட்டித் தீர்வுகாண்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தது.

ஆனல் சர்வகட்சி மாநாட்டில் எந்தப் பிரச்சினையைப் பற்றியும் விவாதம் நடைபெறுமேயொழிய, உருப்படியான முடிவு எதுவும் கிடைக்குமென்று எதிர்பார்க்கமுடியாது. இதனால் தான் சர்வகட்சி மாநாட்டு யோசனையைக் கைவிட்டு, அரசியலமைப்பைத் திருத்துவதற்குப் பேரவையிலுள்ள சகல கட்சிகளையும்கொண்ட தெரிவுக்குழுவை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கவேண்டும்.

தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்க மறுப்புத் தெரிவித்ததற்குத் தமிழர் கூட்டணி சில காரணங்களைக் கூறுகின்றது.

தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள், தமிழ் மக்களால் ஏற்படுத்தப்பட்டவையல்ல. பெரும்பான்மைக் கட்சிகளால் ஏற்படுத்தப்பட்ட இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டிய பொறுப்பு அவைகளையே சாரும்.

இப்போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கட்சிகள் பலவும் தமிழ்மக்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொண்டிருப்பதுமட்டுமல்ல அவற்றிற்கு நியாயமான தீர்வு காணப்படவேண்டுமென்றும் வலியுறுத்திவருகின்றன.

மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடத்திற்கு வந்துள்ள ஐக்கிய தேசியக்கட்சி, இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமிழ் பேசும் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் அரசியலமைப்பின் மூலம் தீர்வுகாணமுடியும்.

இப்போதுள்ள சூழ்நிலையில் அரசாங்கம் இதைச் செய்யுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

தெரிவுக் குழுவில்; தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் அங்கம் வகிக்க மறுத்துவிட்டபோதிலும் தெரிவுக்குழு தயாரித்துப் பேரவையில் விவாதத்திற்குச் சமர்ப்பிக்கப்படவிருக்கும் அரசியலமைப்புத் திருத்த நகல் மசோதா மீதான விவாதத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தவறவிட்டுவிடக் கூடாது! தவறவிடமாட்டார்களென்றே எதிர்பார்ப்போம்.

### கிராம அபிவிருத்தியில் யாழ். லயன்ஸ் கழகம்

# வேம்பிராய் கிராமம் வளம்பெறப்போகிறது

(யாழ்ப்பாணம்)

சமூக அபிவிருத்திப் பணிகளில் தன்னை அர்ப்பணித்து நாட்டுமக்களின் நலனுக்காக உழைத்துவரும் யாழ் லயன்ஸ் கழகம் அதன் அடுத்த ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தில் புத்தூர் வேம்பிராய்க்கிராமத்தை மாதிரிக்கிராமமாகத் தெரிவுசெய்துள்ளது.

இக்கிராமமக்களில் பலரும் தனிப்பட்ட காணிச் சொந்தக்காரர்களால் குடியமர்த்தப்பட்டு மூன்று தலைமுறையாக வாழ்ந்துவருவதால், அரசினல் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவில்லையாம்.

பாடசாலை வசதிகள், குழிமலகூட வசதிகள்; குடிநீர் வசதிகள்; சமூகப்பணிமன்றங்கள், போக்குவரத்துவசதிகள், சௌக்கியவசதிகள், கூட்டுறவுக்கடை வசதிகள் இக்கிராம மக்களுக்கு இதுவரை கிடைக்கவில்லையாம்.

புத்தூர்க்கிராம சபையும், பகுதி உதவி அரசாங்க அதிபரும் இவ்விஷயத்தில் அக்கறை செலுத்தவில்லையென்று பிரஸ்தாப கிராமவாசிகள் ஒரு கலந்துரையாடலின்போது தெரிவித்தனராம்.

நேற்றுமுன்தினம் யாழ். லயன்ஸ் கழகப்பிரமுகர்களான டாக்டர்கள் லயன் எஸ். சுப்பிரமணியம், லயன் சபாரத்தினம், லயன் கிறிஸ்ரி யோசப், லயன் பா. சிவானந்தன், லயன் எஸ். ராஜேந்திரா, கோப்பாய் சுகாதார அதிகாரி திரு வாராளசிங்கம், பொதுச் சுகாதார பரிசோதகர் திரு. சிவசுடபிரமணியம், மருத்துவ மாதர்கள் 'ஈழநாடு' பிரதிநிதி ஐயா. சச்சிதானந்தம், ஆகியோர் இக்கிராமமக்களைச் சந்தித்து உரையாடினர்.

தாங்கள் மூன்று தலைமுறையாக, சுமார் 250 குடும்பங்கள் தனியார் காணிகளில் குடியிருப்பதாகவும், தனியாருக்குச் சொந்தமான காணிக்குத் தகைப்பணத்தை வருடாவருடம் செலுத்திவருவதாகவும் தங்களைப் பலமுறை காணிச் சொந்தக்காரர்கள் குடியெழுப்பி விடுவதாகக்கூறிவருதால் தாம் சௌகரிய வசதிகளுக்கான சில திட்டங்களைச் செய்யமுடியாமல் இருப்பதாகவும் அவர்கள் இக்கலந்துரையாடலின்போது கூறினராம்.

யாழ். லயன்ஸ் கழகப்பிரமுகர்கள், இவர்களுக்கு உடனடியாகவே சமூக கூட்டுறவு முறையில் பல பணிகளைச் செய்யவிருப்பதாகவும், இதற்காக அவர்கள் ஒவ்வொருவரும், உழைப்பாளிகளாக மாறவேண்டுமென்றும் தெரிவித்தனராம்.

யாழ். லயன்ஸ் கழகப் பிரமுகர்களின் ஆரம்பபணிகளாக, அரசாங்கத்தால் வழங்கப்பட்ட குடியேற்றக்காணிக்கு சிரமதான முறையில் பாதை அமைத்தல், பாலர் பாடசாலை ஆரம்பித்தல், கலைமதி சனசமூக நிலையத்தில் கூட்டுறவுக்கடை அமைத்தல், தனியாகக் கிணறு தோண்டுதல், இலவச வைத்திய சிகிச்சை உதவியளித்தல் ஆகிய பணிகளைச் செய்யதிட்டமிட்டுள்ளனர்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 21, 22-ந் திகதிகளில் கோப்பாய் வைத்திய அதிகாரிகளும் யாழ். லயன்ஸ் கழக டாக்டர்களும் இக்கிராமத்தில் பெரியோர் முதல் குழந்தைகள் வரை 1500 பேருக்கு இலவச வைத்திய வசதிகளை அளிக்கவுள்ளனர்.

இதற்காக அக்கிராம மக்களைக்கொண்ட குழுவொன்றை ஸ்தாபித்து அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்படும். சம்பந்தப்பட்டவர்கள் இதற்குப் பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டுமென்று யாழ். லயன்ஸ் கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். [கெ-அ]

## சட்டசபை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்தார். திரு. மு. கருணாநிதியைத் தொடர்ந்து தி. மு. கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச்செய்தனர்.

இதன்பின்னர் சுமார் 15 நிமிடங்களில் திரு. கருணாநிதியும், கழக உறுப்பினர்களும் சபைக்கு மீண்டும் வந்து கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து சபை மீண்டும் களைகட்டியது.

விவசாயப் பேரணியை அனுமதித்துவிட்டு ஆயிரக்கணக்கான தி. மு. கழகத்தினரை அரசு கைதுசெய்திருக்கிறது என்று கூறி, காரசாரமான விவாதத்தை ஆரம்பித்துவைத்தார் தி. மு. கழக உறுப்பினர் திரு. சுப்பு.

கேள்வி நேரத்தின்போது, வழக்கத்துக்கு [10 கேள்விகளுக்கு] மாறாக இன்று முப்பது கேள்விகள், பட்டியலில் இடம் பெற்றிருந்தன. தி. மு. கழகத்தினரின் கணைகளுக்கு நிதி அமைச்சர் திரு நாஞ்சில்மனோகரனே அரசு சாரிபில் பதிலளித்துக்கொண்டிருந்தார்.

இன்றைய கூட்டத்துக்கு முதலமைச்சர் திரு. எம் ஜி இராமச்சந்திரன் சமுகமளிக்கவில்லை. நாளை சபைக்கு வருவார் என்று சபாநாயகர் திரு. முனு ஆதி ஒரு கட்டத்தில், அங்கத்தவர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

இன்று ஆரம்பமான தமிழ் நாடு சட்டசபைக் கூட்டத் தொடர் ஜனவரி மாதம் 10-ம் திகதி வரை நடைபெறும்.

## கள்ளநோட்டு சந்தேக நபர் கைதாகி விடுதலை

[சுட்டுவில்]

கைதடி கிராமிய வங்கி கொள்ளையில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று பொலிசாரால் சந்தேகிக்கப்பட்ட நபர் ஒருவர் ஐம்பது ரூபா கள்ள நோட்டு அடிக்க முயன்றார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் பின்னர் 1000 ரூபா பிணையில் இவர் விடுதலை செய்யப்பட்டார்.

கைதடி கிழக்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவர் கள்ள நோட்டு அடிக்க முயன்றார் என்ற சந்தேகத்தின் பேரில் சாவகச்சேரிப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. என். குகதாசன் கைது செய்தார். இந்த நபரிடம் காசு அடிப்பதற்கான பேப்பரை உட்படச் சில கருவிகளும் கைப்பற்றப்பட்டன. இவர் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது கைதடி கிராமியவங்கிக் கொள்ளையில் இவர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகப்படுவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இவரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி மீண்டும் இவர் நேற்று கோட்டில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி அவரை 1000 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டு மேல்விசாரணையை அடுத்த மாதம் வரை ஒத்திவைத்தார். (அ)

## இன்று வெளியாகும் "தீ 77"

(யாழ்ப்பாணம்)

இனக்கலவரத்தில் குண்டசாலை விவசாயக் கல்லூரியில் நிகழ்ந்த சம்பவங்களை மையமாகக்கொண்ட "தீ 77" என்னும் நூல் வெளியீட்டு விழா, இன்று மாலை யாழ் றிமர் மண்டபத்தில் யாழ் வளாக தமிழ் மன்ற துணைத் தலைவர் மு சிவதாஸ் தலைமையில் நடைபெறும்.

இவ்விழா முன்னர் யாழ். வளாக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவிருந்தது. இது பின்னர் மாற்றம் செய்யப்பட்டுளது.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நூலை வெளியிட்டு உரையாற்றுவார்.

முதற் பிரதியை சிவதர்ம வள்ளல் திரு க கனகராஜாவும், விவசாயக் கல்லூரி மன்றத் தலைவர் எஸ். சிவநேசனும் பெறுவர்.

மாணவத் தலைவர்களான திருவாளர்கள் த. சிதம்பரநாதன், இரா ஜெயச்சந்திரன், தர்மராசா, தேவேந்திரன். ஆசிரியர் கோவை மகேசன் உட்பட பலர் உரையாற்றுவர். (கெ)

## தெரிவு

[அரியாலை]

யாழ்ப்பாணம் கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலையத்தின் புதிய வருட தலைவர், உபதலைவர் தெரிவுக்கான பொதுசன வாக்கெடுப்பில் திரு. க. கலாமோகன் தலைவராகவும், திரு வ. ஞானசேகரம் உபதலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வாக்களிப்புக்கு திரு. ஆ. சி குணரத்தினம் பிரதம அதிகாரியாகப் பணியாற்றினர். (அ)

## கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் நிலை' பற்றி ஆராயப்படும்.

கருத்தரங்குக்கு சட்டத்தரணி குமரகுரு தலைமைவகிப்பார். தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம், மாவை. சேனாதிராசா உட்படப் பல கூட்டணிப் பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள். (கெ)

## தமிழ்நாட்டில்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

வழங்கவேண்டும். அந்தப் போர்க்கருவிகளைப் பயன்படுத்துகின்ற வீரர்களாகத் தமிழ் இளைஞர்கள் தங்களை ஆக்கிக் கொள்ளவேண்டும். அத்தகைய ஒரு பட்டாளத்தைத் தான் இங்கு காண்கிறேன். உங்களையெல்லாம் வரவேற்கிறேன். விடைகொடுத்து உங்களுடைய நாடுகளுக்கு அனுப்பவேண்டிய நேரத்தில் வரவேற்கின்றேனே என்று நீங்கள் கருதலாம். மீண்டுமொருமுறை வரவேண்டும் என்பதற்காகத்தான் வரவேற்கிறேன். (கி)

'ஈழநாடு'
தினக்குறிப்பு
1978
விற்பனையாகின்றது
விலை:- ரூபா 4-50 சதம்
வியாபாரிகளுக்கு கழிவுண்டு.
தொடர்பு கொள்ளவும்:-
கலாநிலையப் பதிப்பகம்
303, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7707

இப்பத்திரிகை "ஈழநாடு, லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெண்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The EelanaaduPost Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in SriLanka.